# சிங்காரச்சென்னை

SINGHARA CHENNAI

ஆசிரியர் S. ரங்கநாதன் | தமிழ் மாதம் இருமுறை

20 ஆகஸ்ட் -04 செப்டம்பர் 2009 | மலர் 1 இதழ் 16 | இலவச விநியோகம் | 8 பக்கங்கள்

20 AUGUST - 04 SEPTEMBER 2009 | VOLUME 1- ISSUE 16 | Free distribution | 8 PAGES


## பன்றிக் காய்ச்சல் : தடுக்க என்ன செய்ய வேண்டும்?

பன்றிக் காய்ச்சல் மெக்ஸிகோ நாட்டில் உருவானது. அதைத் தொடர்ந்து பல்வேறு நாட்டில் பன்றிக் காய்ச்சல் நோய் பரவி பலர் இறந்துள்ளனர்.

இந்தியாவிற்கு இந்த நோய் வராது என்றுதான் முதன் முதலில் எல்லோராலும் நினைக்கப்பட்டது. ஆனால் வெளிநாடுகளிலில் இருந்து வந்தவர்கள் மூலம் இந்தியாவிலும் தற்போது பரவி பலரை பலிவாங்கிவிட்டது.

நோய் எதிர்ப்புத் தன்மை குறைந்த இரண்டு முதல் 17 வயதுள்ளவர்கள் மற்றும் 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே இந்தக் காய்ச்சல் ஏற்படுகிறது.

காற்றில் பரவும் வைரசை (எச்1என்1) சுவாசிப்பதால் பன்றிக்காய்ச்சல் நோய் ஏற்படுகிறது.

**பன்றிக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க என்ன செய்ய வேண்டும் :**

சளி, காய்ச்சல், தும்மல் நீடித்தால் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.



பன்றிக் காய்ச்சல் நோயால் பாதிக்கப் பட்டிருந்தால் இரண்டு முதல் 16 வயதுள்ள குழந்தைகள் 20 மி.கி. முதல் 60 மி.கி மற்றும் பெரியவர்கள் 75 மி.கி. டாமீ புளூ என்ற மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே இம்மாத்திரையை சாப்பிட வேண்டும்.

நோய் தடுப்பு நடவடிக்கை எனக் கருதி பாதிக்கப்படாதவர்கள் கண்டிப்பாக இம்மாத்திரையை சாப்பிடக்கூடாது.

வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தால் முதலில் கை, கால்களை கழுவி விட வேண்டும்.

சளி, தும்மல் இருப்பவர்களிடம் சிறிது நாள் தள்ளியே இருக்க வேண்டும்.

கைக்குட்டை அல்லது மாஸ்க்கை வாய், மூக்குகளில் கட்டிக்கொண்டு வெளியில் செல்லுங்கள்.

மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் போகாதீர்கள்.

பஸ் ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன், விமான நிலையம் அருகில் உள்ளவர்கள் வந்து இறங்கும் பயணிகளிடம் பேச்சுக் கொடுக்காதீர்கள்.

வெளியூர்கள், வெளிநாடுகளில் இருந்து வந்து இறங்கும் பயணிகளிடம் ஆட்டோ டிரைவர்கள், கால்டாக்சி டிரைவர்கள் வாயில் கைக்குட்டை அல்லது மாஸ்க் கட்டிக் கொண்டு பேசுங்கள்.

குழந்தைகளிடம் உடனடியாக பரவிவிடும் அபாயம் இருப்பதால் பெற்றோர்கள் குழந்தையை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். எப்போதும் அவர்களை சுகாதாரமான முறையில் பாதுகாக்க வேண்டும்.

சென்னையில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட் மட்டுமே இந்த காய்ச்சலை கண்டறியும் சோதனைக்கூடமாக உள்ளது. அரசு இந்நோயைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

### சென்னை 370-வது ஆண்டு நிறைவு கொண்டாட்டம்

## சென்னை தினம் - 2009

**செ**ன்னை உருவாக்கப்பட்டு 370வது ஆண்டு நிறைவு நாள் ‘சென்னை தினம் - 2009’ என்ற பெயரில் 15 நாள் கொண்டாடப்படுகிறது.



1925ம் ஆண்டு சென்னை சென்ட்ரல் ரயில்நிலையம்

இது குறித்து சென்னை வரலாற்று ஆராய்ச்சியாளர் முத்தையா மற்றும் வின்சென்ட், சசிநாயர் ஆகியோர் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது :

‘மதராஸ்’ என்ற இன்றைய சென்னை 1639-ம் ஆண்டு ஆகஸ்ட் 22-ல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டது. அதன் 370வது நிறைவு தினம் ‘சென்னை தினம் - 2009’ என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

ஆகஸ்ட் 16 முதல் ஆகஸ்ட் 31 வரை பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தரமணி ரோஜா முத்தையா மன்றத்தில் சென்னையில் காந்தி என்ற தலைப்பில் ஆகஸ்ட் 23ல் கண்காட்சி நடைபெற உள்ளது.

மேலும் ‘அருட்பா மருட்பா’, ‘சென்னையில் விமானம்’ உள்ளிட்ட பல தலைப்புகளில் கருத்தரங்கம், பட்டிமன்றம் உள்ளிட்ட 75 நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் இந்த விழா ஆரம்பத்தில் 15 நிகழ்ச்சிகளுடன் துவக்கப்பட்டது என்றார்.




## லயோலா கல்லூரி அருகே நடைபாதை அமைக்க மாநகராட்சி நடவடிக்கை எடுக்குமா?

**நு**ங்கம்பாக்கம் லயோலா கல்லூரி நுழைவு வாயிலில் இருந்து நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் வரை இடது பக்கத்தில் நடைபாதை (Foot path) சுமார் 2 ½ அடி அகலம்தான் உள்ளது. மாலை நேரங்களில் கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் லயோலா கல்லூரி பேருந்து நிறுத்தத்தில் நூற்றுக்கணக்கில் காத்திருப்பதால் நடைபாதை முழுவதும் ஆக்கிரமிப்பட்டு சாலையிலும் பலபேர் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இச்சாலையில் மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரை போக்குவரத்து நெரிசல் எந்த அளவிற்கு பொதுமக்களை பாதித்து வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் நுங்கம்பாக்கம் இரயில் நிலையத்தை நோக்கிச் செல்லும் பாதசாரிகள் இரயில் நிலையத்தை அடைய பெரும் துயரத்திற்கு ஆளாகிறார்கள். இது வேளைநாட்களில் பொதுமக்கள் சந்திக்கும் தினசரி பிரச்சினைகள்.

இதற்கு தீர்வு காண சென்னை மாநகராட்சி அதிகாரிகள் முன் வருவார்களா? மேற்கண்ட இடத்தில் உடனடியாக சுமார் 5 அடி அளவிற்கு நடைபாதை (Foot path) அமைத்துத் தந்தால் பொதுமக்கள் சிரமமின்றி இரயில் நிலையத்தை அடைய முடியும். மேலும், நுங்கம்பாக்கம் இரயில் நிலையத்திலிருந்து லயோலா கல்லூரி நோக்கி வரும் இரயில் பயணிகள் சாலையை கடப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள்.

அவர்களுக்கு ஏதுவாக இரயில் நிலையத்திலிருந்து வெளியே வரும் பயணிகள் இரயில்வே மேம்பால படிக்கெட் (நடைமேம்பாலம்) இறங்கியவுடன் சாலையை கடப்பதற்கு நுங்கம்பாக்கம் மயானம் (இடுகாடு) நோக்கி ஒரு தரைபாலம் அமைத்து இடுகாடு ஓரம் சுமார் 4 அடி அளவில் நடைபாதை அமைத்துத் தந்தால் பாதசாரிகள் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்காமல் சுலபமாக சாலையை கடக்க வசதியாக இருக்கும்.

மேலும், லயோலா கல்லூரியிலிருந்து சூளைமேடு நோக்கிச் செல்லும் சுரங்க பாதையிலுள்ள பாதசாரிகள் உபயோகப்படுத்தும் நடைபாதை சரிவர பராமரிக்கப்படாமல் குப்பை மண்டலமாக காட்சி அளிக்கிறது. அங்கு தினசரி சுத்தம் செய்ய சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்தால் பொதுமக்கள் மனமுவந்து பெரிதும் பாராட்டுவார்கள்.

## குடிபோதையில் வாகனம் ஓட்டாதீர்கள்

## காவல்துறையினரின் விழிப்புணர்வு பிரச்சாரம்

சென்னை மாநகர போக்குவரத்து போலீசாரும், நுங்கம்பாக்கம் மெட்ரோ பிளஸ் லேப் இணைந்து குடிபோதையில் வாகனம் ஓட்ட வேண்டாம் என்ற பிரச்சாரத்தைத் துவக்கினர். இதில் போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் அவர்களும், போக்குவரத்து கூடுதல் கமிஷனர் ஷகில் அக்தர் அவர்களும் மற்றும் போலீஸ் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இந்தப் பிரச்சாரத்தில், இந்தியாவில் ஆண்டுக்கு 90,000 பேர் சாலை விபத்துகளில் பலியாகின்றனர் என்றும் 12 லட்சம் பேர் விபத்தில் சிக்கி காயமடைகின்றனர் என்றும் இதில் 3 இலட்சம் பேர் நிரந்தரமாக ஊனமாகின்றனர் என்றும் கூறியுள்ளனர். இவை அனைத்தும் கவனமின்மை மற்றும் குடிபோதையால்தான் ஏற்படுகின்றன என்ற தகவல் ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது.

இந்திய சாலைகளில் தாறுமாறாக வாகனங்களை ஓட்டுவதால் விபத்துகள் ஏற்படுகின்றன என்றும் 35 வயதிற்குட்பட்டவர்கள் அதிகளவில் சம்பாதிப்பதால், மது பழக்கம் அதிகரித்துள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. இது பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. அதனால், குடிபோதையில் வாகனம் ஓட்டுவதற்கு எதிரான பிரச்சாரத்தை துவக்கியுள்ளதாகக் காவல்துறையினர் கூறினர்.

### வாகன ஓட்டிகள் உறுதிமொழி

- சாலை விதிகளை மதிப்போம் - விபத்தினை தடுப்போம்!
- குடிபோதையில் வாகனம் ஓட்டுவதை தவிர்ப்போம்!
- ஒருவழிப் பாதையில் செல்வதை தவிர்ப்போம்!
- தலைக்கவசம் அணிந்து வாகனம் செலுத்துவோம்!
- இருசக்கர வாகனத்தில் இருநபர்களுக்கு மேல் செல்வதை தவிர்ப்போம்!
- வாகனம் ஓட்டும்பொழுது செல்போன் பேசுவதை தவிர்ப்போம்!
- ஓட்டுநர் உரிமம், ஆர்.சி. புத்தகம், இன்சூரன்ஸ் வைத்திருப்போம்!



சிங்காரச்சென்னை **எஸ். ரங்கநாதன்**

உங்கள் விளம்பரங்கள் மற்றும் செய்திகளுக்கு
தொடர்பு கொள்ளுங்கள்

**சிங்காரச்சென்னை**

(தமிழ் மாதம் இருமுறை)
58/19, வடக்கு மாட வீதி,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
மின்னஞ்சல் : singharachennai@gmail.com
98403 44783

**ஆசிரியர் S. ரங்கநாதன்**

**INSURANCE SERVICES**

**Mediclaim with unlimited coverage**
**30 to 35 % discount on vehicle insurance renewal premium**
**contact : 99629 72844**

**சரஸ்வதி பவன்**

ஸ்வீட்ஸ், பேக்கரி, சாட்ஸ் மற்றும் ஸ்நாக்ஸ்

92, (208) வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை
(மார்க்கெட் பேருந்து நிலையம் எதிரில்)
நுங்கம்பாக்கம், சென்னை - 600034
தொலைபேசி : 2826 1956



**மணிகண்டன்**

**பேக்கரி மற்றும் ஸ்வீட்ஸ்**

ஸ்வீட்ஸ், பேக்கரி, சாட்ஸ் மற்றும் ஸ்நாக்ஸ்

198,வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600034

**ஆயுத பூஜை மற்றும் தீபாவளி ஆர்டர்கள் வரவேற்கப்படுகின்றது**

# நுங்கம்பாக்கம் ரேஷன் கடையின் அவலநிலை

**நு**ங்கம்பாக்கம் F-3 காவல் நிலையம் எதிரில் டி.யு.சி.எஸ். நிறுவனம் இயங்கி வருகிறது. இதில் வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள நுழைவு வாயிலில் டாஸ்மார்க் பார், டாஸ்மார்க் கடை, இண்டேன் கேஸ், காமதேனு சூப்பர் மார்க்கெட் இயங்கி வருகிறது.

இதற்குப் பின்புறம் கிழக்கு மாடவீதியில் சிறிய நுழைவு வாயிலுடன் இரண்டு ரேஷன் கடை (நியாயவிலை கடை) இயங்கி வருகிறது. இரண்டு கடை இயங்கி வரும் இடம் சுமார் 400 சதுர அடிதான். அதுவும் பாழடைந்த நிலையில் பழைய திரைப்படத்தில் வருவதுபோல் காட்சி அளிக்கிறது.

இங்கு நுங்கம்பாக்கம் -1 (MCO.19) எண்ணுள்ள கடையில் 1900 குடும்ப அட்டைதாரர்களும் நுங்கம்பாக்கம் -2 (MCO.20) எண்ணுள்ள கடையில் 1400 குடும்ப அட்டைதாரர்களும் பொருட்கள் பெற்று செல் கிறார்கள்.

சுமார் 3300 குடும்ப தாரர்கள் அவர்களுடைய குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் பொருட்கள் பெற்றுச் செல்ல மாதம் ஒருமுறை வருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். பொதுமக்களுக்கு எவ்வித வசதியும் இல்லை. மழை, வெயில் எதுவாக இருந்தாலும் சாலையில்தான் காத்துக்கிடக்க வேண்டும். இவர்கள் நிலைதான் இப்படி என்றால் இக்கடையில் பணிபுரியும் அலுவலர்களின் நிலை பரிதாபம்தான்.

MCO.19 கடையின் அலுவலர் பிளாட் பாரத்தில்தான் அமர்ந்துதான் பில்போட்டு பணம் வசூலிக்கிறார். அந்த அளவுக்கு இடத்தட்டுப்பாடு.

இரண்டு கடைகளுக்கு 2 காசாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், எத்தனை தராசு இருக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இங்கே ஆய்வு செய்ய வேண்டும். இரண்டு கடைக்கும் சேர்த்து 3300 பயனாளிகளுக்கு ஒரு தராசுதான் இருக்கிறது. இதனால் கால தாமதம் மற்றும் சிரமம் ஏற்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மேற்கண்ட 2 கடைகளையும் தகுந்த இடத்திற்கு மாற்றம் செய்து பொதுமக்களுக்கும் பணிபுரியும் அலுவலர்களுக்கும் சிரமம் ஏற்படாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பகுதி பொதுமக்கள் விரும்புகிறார்கள்.

# இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்து வணங்குவதன் தத்துவம்



*நாம் நமது வலது கையால் பல வேலைகள் செய்கிறோம். எழுதுகிறோம், உண்ணுகிறோம், ஆனால் இடது கையை வேறு வேலைக்காகப் பயன்படுத்துகிறோம்.*

*கடவுளை வணங்கும்போது இந்த இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்து கூப்புகிறோம். இறைவன் முன் உயர்வு தாழ்வு ஏதும் இல்லை. எல்லோரும் சமம் என்பதே இதன் அர்த்தம்.*

*கடவுளை வணங்கும்போது தலைக்கு மேல் சிறிது இடைவெளிவிட்டு கரங்களை தூக்கி வணங்க வேண்டும்.*

*தாயை வணங்கும் போது வயிற்றுக்கு நேராக கை கூவித்து வணங்க வேண்டும். ஏனெனில் கருவறையில் நம்மை சுமந்தவருக்கு நாம் செய்யும் மரியாதையாகும்.*


*தகப்பன் குரு - தந்தையும் குருவும் அறிவை புகட்டும் ஆசானாக விளங்குவதால் மூலை இருக்கும் நெற்றி நேராக வைத்து வணங்க வேண்டும்.*

*நெஞ்சார போற்றும் உறவினர்கள் நண்பர்கள் நெஞ்சின் அருகில் வைத்து வணங்க வேண்டும்.*

# 78வது வட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை மு.க.ஸ்டாலின் வழங்கினார்



*78வது வட்ட பயனாளிகளுக்கு துணை முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார். உடன் மாநகர மேயர் திரு.மா.சுப்ரமணியன், மாநகராட்சி ஆணையாளர் ராஜேஷ் லக்கானி, 78வது வட்ட அவைத் தலைவர் திரு.ஸ்டெர்லிங் மோகன்*



# அருள்மிகு பத்மாவதி சமேத அருள்மிகு பிரசன்ன வேங்கடேச பெருமாள் திருக்கோயிலில் அஷ்டபந்தன மகாசம்ப்ரோக்ஷண விழா

**ஸ்ரீ**யபதியாய் அவாப்த ஸமஸ்த காமனாய் அவாங்க மனோ கோசரனாய் அகில மங்கள குண ஸ்வரூபியாய் விளங்கும் சர்வேஸ்வரன் சேதனரை பணிக்கொள்ள அவாக் கொண்டு, சென்னை பச்சிம பாகத்தில், ப்ருந்தாருண்யபுரி என்னும் நுங்கம்பாக்கத்தில் சுப்பு தெய்வநாயக முதலியாரால் ஸ்தாபிக்கப் பெற்று, திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் சேதனர்கள் ஜீவிக்கும் பொருட்டு நாளது திருவள்ளுவராண்டு 2040 ஆவணி மாதம் 8-ந்தேதி (24-8-09) செவ்வாய்கிழமை காலை 4-30 மணி முதல் 6.00 மணிக்குள்ளாக, கடக லக்னத்தில் துவஜாரோஹணம் முதல், ஆவணி மாதம் 17ந்தேதி (03-09-09) வியாழக்கிழமை முடிய பிரம்மோற்சவம் நடக்கிறபடியால் அகில பக்த சிரோமணிகள் யாவரும் வருகை தந்து ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் கிருபா கடாக்ஷத்திற்கு பாத்திரராகும்படி பிரார்த்திக்கின்றோம்.

மேற்கண்ட விழாவிற்கான ஏற்பாடுகளை நிர்வாக அதிகாரி எம். ஜெயசந்திரன் மற்றும் பரம்பரை அறங்காவலர்கள் ஆர்.கல்யாணராகவன், ஆர். ராதாகிருஷ்ணன் சிறப்பாக செய்து வருகின்றனர்.

**INSURANCE SERVICES**
*For all kind of insurance policies*
**L.I.C. MEDICLAIM**
PLEASE CONTACT
S. RANGANATHAN
98403 44783 / 93828 47398

**FOREX TRADING**
Learn Forex Trading and Earn 20% to 200 % per month. at your home / Office Excellent, Scientific, Technical, Practical Training & Trading
JAYAMOHAN - 98405 81415

# விநாயகர் சதுர்த்தி விழா : விநாயகர் வழிபாட்டில் சில நடைமுறைகள்

எந்த தெய்வத்திற்குப் பூஜை செய்தாலும் முதலில் விநாயகருக்கு ஸங்க்ரஹ பூஜை ஒன்றைச் செய்த பிறகே - அந்த தெய்வத்திற்கான பிரதான பூஜையைத் தொடங்குவது வழக்கம்.

அந்த விநாயகர் பூஜையில் நாம் கணபதியை வழிபட நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்டுக் கீழ்க்கண்ட சுலோகத்தைச் சொல்வது வழக்கம்.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்

ப்ரஸந்ந வதநம் த்யாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே

இதில் கணேசரை வர்ணிக்க ஐந்து வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

1. சுக்லாம் பரதர வெள்ளை வஸ்த்ரம் கட்டிக் கொண்டிருப்பவர். 2. விஷ்ணும் எல்லா இடத்திலேயும் பரவியிருப்பவர். 3. சசிவர்ணம் நிலா மாதிரி பால்போன்ற நிறமுடையவர். 4. சதுர்புஜ நான்கு கைகள் உள்ளவர். 5. ப்ரஸந்ந வதநம் நல்ல மலர்ந்த முகமுள்ளவர்.

இந்த ஐந்து வார்த்தைகளில் ஒவ்வொன்றும் ஒரு குட்டாக ஐந்து தரம் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ள வேண்டும். வலக்கையை இடக்கையின் முன் வைத்து வலக்கை யால் இடப்புறத்திலும், இடக் கையால் வலப்புறத்திலும் முன் மண்டையில் குட்டிக் கொள்வது முறை.

விநாயகர் காக்கை வடிவம் கொண்டு அகஸ்தியரின் கமண்டலத்தில் இருந்த நீரைக் கவிழ்த்து காவிரி பெருக்கெடுத்தோடச் செய்தார்.

பின் காக்கை வடிவம் நீங்கி அந்தணச் சிறுவனாய் மாறினார். அவரைத் துரத்தித் தலையில் குட்டுவ தற்காக விரைந்தார் அகஸ்தியர். பின் விநாயகர் தமது உண்மை வடிவில் காட்சியளித்தார். குட்டுவதற்கு ஓங்கிய கையால் தம் நெற்றியில் குட்டிக் கொண்டார் அகஸ்தியர்.

“உமது திருமுன்னர் நெற்றியில் குட்டிக் கொண்டு வழிபடும் மெய்யன்பர்களின் குறை தீர்த்து அருள் புரிய வேண்டும்” என்று அகஸ்தியர் வேண்டினார்.

விநாயகப் பெருமானும் அவ்வாறே செய்வதாக வாக்க ளித்தார். தலையில் குட்டிக் கொள்ளும் இடத்தில் (இரு புறமும்) உள்ளது 'கூனுட்ணீணுச்டு டீணிளுனு'. பேச்சுத் திறன் நன்கு வளர்ச்சி யடைய காது கேட்பது அவசியம். ஞாபக சக்தியைத் தூண்டும் நாடிகள் அமைந்துள்ள இடமும் இதுவே. தனது பணியைச் செவ்வனே செய்தால் மட்டுமே இது சாத்தியம்.

நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளும்போது அங்கே உள்ளடங்கி இருக்கும் அமிர்த கலசத்தை எழுப்பி அங்கே உள்ள அமிர்தம் தேஹம் முழுவதும் பரவச் செய்வதற்கே என யோகிகள் கூறுவர்.

விநாயகர் வழிபாட்டில் மட்டுமே இடம்பெறும் இன்னொரு சிறப்பு அம்சம் தோப்புக்கர்ணம் போடுவது. நமது மூலாதாரத்தில் உள்ளவர் கணபதியே என்பதை எடுத்துக் காட்டவே இந்த வழிபாட்டுச் செயல்.

தோப்புக் கரணம் மூலாதாரத்தில் உள்ள சுஷும்னா நாடியைத் தட்டி எழுப்புவதற்காகவே போடப்படுகிறது.

விநாயகருக்கு முன் காதுகளைப் பிடித்து, நெற்றியில் குட்டிக் கொண்டு, தோப்புக்கரணம் போடுவதும் - எவ்வளவு உயர்ந்த மனிதன் ஆனாலும் சிந்தையைக் கட்டுப்படுத்தி, வாழ்க்கையில் பணிவுடன் இருக்க வேண்டும் என்பதைக் காட்டவே.

அடங்காதவனுக்கும் பணிவு வரத் தோப்புக்கர்ணம் போடவைக்கும் முறை இந்த அடிப்படையிலேயே ஏற்பட்டது.

“தோர்பி கர்ணம்” என்பதே தோப்புக் கர்ணம் என்று மாறியது. “தோர்பி” என்றால் இரண்டுக்கும் மேற்பட்ட கைகளைக் குறிக்கும். இது பஹு வசனம். பன்மைச் சொல். “கர்ணம்” என்றால் காது.



“தோர்பி கர்ணம்” என்றால் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது.

ஒரு சமயம் மஹாவிஷ்ணுவினு டைய சக்கரத்தை அவரது சகோதரி மைந்தனான பிள்ளையார் தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம்.

அவரைச் சிரிக்க வைத்து அவர் வாயிலிருந்து சக்கரத்தைக் கீழே விழச் செய்ய மஹாவிஷ்ணு தனது நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு கால்களை மடக்கி தாழ்ந்தும் எழுந்தும் கோணங்கி செய்தாராம்.

குழந்தை கணேசர் இதைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தாராம். சக்கரமும் கீழே விழுந்ததாம்.

ஆகவே தோப்புக் கரணம் போடுவது குழந்தை தெய்வமான பிள்ளையாரை சந்தோஷிக்கச் செய்யவே.

இன்னொரு சம்பவமும் இதோடு கூறப்படுவதுண்டு. தேவர்கள் கயமுகாசுரனின் (கஜமுகாசுரன்) சந்நிதியில் தோப்புக் கரணம் இட்டு வந்தனர். அவனை விநாயகர் ஸம்ஹரித்த பிறகு அவன் முன்னர் இட்ட தோப்புக் கரணத் தையும், தலைக் குட்டுதலையும் நன்றியறிவு காரணமாக விநாயகரின் திருமுன்பு செய்யத் தொடங்கினர்.

இன்று தொட்டு எம்மைப் போன்று உலகுளோர் உன்முன் தோப்புக் கரணம் போட்டு வணங்கினால் அவர்கள் குறை தீர்த்து நல்லருள் செய்ய வேண்டுமென வேண்டினர்.

“உன்றன் முன்னம் உலகுளர் யாவரும்
இன்று தொட்டெமைப் போல் இப்பணிமுறை
நன்று செய்திட நல்லருள் செய்கென”
என்பது கந்தபுராணம்.

விநாயக பெருமானும் தேவர் கூற்றிற்கு அருள் பாலித்தார். இதிலிருந்து விநாயகர் முன் தோப்புக்கரணம் போட்டு வழிபடும் மரபு உண்டானது.

ஒரு குற்றவாளி தான் செய்த குற்றத்திற்காக தண்டனையைத் தானே அனுபவிப்பது போல, கடவுளின் சமீபத்தில் செல்வதற்கு தகுதியில் லாதபடி குற்றங்கள் நிறைந்தவர். தாம் செய்த குற்றத்திற்குத் தாமே தண்டனை அனுபவிக்க மேற்கூறியவாறு செய்து, இனி அவ்விதக் குற்றங்கள் செய்ய மாட்டேன் என உறுதி செய்வதே ஆகும்.

### பிள்ளையார் வழிபாட்டில் மூன்றாவது சிறப்பு அம்சம் சிதறுகாய் போடுவது.

விநாயகர் முன் தேங்காய் விடலை இடுவது, தேங்காய் சிதறுவது போல நமது பாவங்கள் அல்லது நமக்கு ஏற்படும் இடையூறுகள் யாவும் சிதற வேண்டும் என்ற தங்கள் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவது.

அஹங்கார மண்டையோட்டை உடைத்தால் உள்ளே அமிருத ரஸமாக இளநீர் இருப்பதை இந்தச் சிதறுகாய் உணர்த்துகிறது என்றும் கூறுவர். பிள்ளையாருக்குப் போடுகிற சிதறுகாய் ஏழைக் குழந்தைகளுக்குப் ப்ரஸாதமாகக் கிடைக்கிறது. ஏழை எளியவர் களின் தெய்வமான பிள்ளை யார், ஏழைக் குழந்தைகளுக்கு இதில் முன்னுரிமை கொடுத்திருப்பதில் ஆச்சரியம் இல்லைதானே.

இந்த இடத்தில் இன்னொரு விஷயத் தையும் சொல்லியாக வேண்டும். இன்றைக்கு எந்த தெய்வத்தின் சந்நிதியிலும் அர்ச்சனை செய்து தேங்காய் உடைத்து நிவேதனம் செய்யும் மரபு - இந்தத் தேங்காய் உடைக்கும் பழக்கமே பிள்ளையார் அருளால் வந்ததுதான்.

விக்னேச்வரர் தம் அப்பாவான ஈசுவரனைப் பார்த்து, “உன் சிரசையே எனக்கு பலி கொடு” என்று கேட்டுவிட்டாராம்.

எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணினால்தான் மஹாகணபதிக்குப் ப்ரீதி ஏற்படுகிறது.

அவ்வளவு பெரிய தியாகம் பண்ணுவதற்குத் தயார் என்பதற்கு அறி குறியாகத்தான் ஈசுவரனைப் போலவே மூன்று கண்களை உடைய தேங்காயை ச்ருஷ்டித்து அந்தக் காயை அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும்படியாக ஈசுவரன் அனுக்ரஹித்திருக்கிறார்.

### பிள்ளையார் திருவுருவ தத்துவம்

பிள்ளையார் யானைத் தலையும் மனித உடலும் கொண்டுள்ளார். யானைத் தலையுடைய தெய்வம் என்று மாற்று மதத்தவர்கள் கேலி பேசுவதைக் கேட்கிறோம்.

இந்த தெய்வ வடிவத்திற்குப் பௌராணிக ரீதியான விளக்கம் உண்டு. அதுபோலவே தத்துவ ரீதியான விளக்கமும் உண்டு.

அம்பிகையின் சரீரத்தில் அவளது இயல்பான தெய்விக மணத்திற்கு மணம் கூட்டும் மஞ்சள் பொடி, குங்குமம், வாசனைப் பொடி முதலிய வற்றைத் தானே தன் சரீரத்திலிருந்து வழித்துப் பிசைந்து ஒரு வடிவம் தந்து அதற்கு உயிரூட்ட கணபதி ஆவிர்பாவம் ஆனதாக புராணம் கூறுகிறது. கஜமுகாசுரனை அழிக்க அம்பிகை படைத்த உருவம் இது.

அம்பிகையின் திவ்ய மங்கள சரீரத்திலிருந்து மங்கள வஸ்துவான மஞ்சள் பொடியை வழித்து மூலப் பிள்ளையாரை ச்ருஷ்டித்ததால்தான் இன்றைக்கும் எந்த சுபகார்யத்தின் ஆரம்பத்திலும் மஞ்சள் பொடியைப் பிள்ளையாராகப் பிடித்து வைத்துப் பூஜை செய்கிறோம்.

தேவகணங்கள், மனித வர்க்கம், விலங்கினம், பூதகணங்கள் என அனைத்து கணங்களுக்கும் நாயகனாக இந்த தெய்வம் விளங்குவதைக் குறிக்கவே - கழுத்துக்கு மேலே விலங்காகிய யானை முகம்; கழுத்துக்குக் கீழே - குழந்தை வடிவிலான மனித உரு; பானை வயிறும் குறுகிய கால்களும் பூத கணங்களைப் போன்று அமைந் துள்ளன; தேவவர்க்கத் தைக் குறிக்க நான்கு கரங்கள்; ஐந்தாவது கரம் தும் பிக்கை; தேவர்களுள் முதல் பூஜை பெறும் தெய்வமாக இவர் இருக்கிறார்.

யானை முகம் தத்துவரீதியாக ப்ரணவ ஸ்வரூபம் என்பர். ப்ரணவ வடிவம் அமைந்துள்ளதை நோக்கு கையில் - யானையின் காது, தலை, துதிக்கை ஆகிய மூன்றும் சேர்ந்தது போல் தோன்றும். எனவே பிள்ளை யார் ஓங்கார மூர்த்தி என்பதை உணர வேண்டும்.

யானைக்கு புத்திக் கூர்மை, ஞாபக சக்தி எல்லாம் மிக அதிகம்; பிள்ளையார் அறிவே வடிவானவர். வலப்பக்கத்தில் தந்தம் இல்லாமலும் இடப்பக்க வாயோரம் தந்தத்தோடும் காட்சி தந்து - தந்தையின் அர்த்த நாரீச்வரத் தத்துவத்தை நமக்குப் புகட்டுகிறார். ஆண் யானைக்கு தந்தம் உண்டு; பெண் யானைக்கு தந்தம் இல்லை. எனவே பாதி ஆண் யானையாகவும் பாதி பெண் யானையாகவும் முகத்தளவில் காட்டுகிறார் கணநாதர்.

அவனது பேழை வயிறு அண்ட சராசரங்கள் அனைத்தும் அவனுள் அடக்கம் என்பதைக் குறிக்கிறது. கச்சையாக அவர் அணிந்துள்ள பாம்பு - சக்தியின் சின்னம்.

விநாயகரின் ஐந்து திருக்கரங்களில் மேலே உள்ள வலக்கரம் அங்குசத்தைத் தாங்கியுள்ளது. யானைமுகக் கடவுள் ஜீவர்களை நல்ல வழியில் நடத்துகிறார்; அதற்கு அறிகுறியாக இருப்பது இந்த அங்குசம்.

மேலே உள்ள இடக்கரத்தில் பாசம் உள்ளது; கணேசர் தீவினையாளர்களை அவன் பாசத்தைக் கொண்டு கட்டி அடக்குகிறார். கீழே உள்ள வலக்கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும், இடக்கரம் மோதகத்தையும் தாங்கி உள்ளன.


ஐந்து கரங்களும் படைத்தல், காத்தல், அருள் புரிதல் முதலான ஐந்து தொழில்களையும் குறிக்கின்றன. விநாயகரின் வாகனம் மூஞ்சூறு.

### மூஞ்சூறு எப்படி யானையைச் சுமக்க முடியும்?

ஆன்மா பெரியதில் எல்லாம் மிகவும் பெரியதாகவும், நுட்பமான வற்றிலேயே மிக நுண்ணியமான தாகும் உள்ளது என்பதையே இது காட்டுகிறது. உடல் சிறிதானாலும் பெரிதானாலும் உள்ளிருக்கும் ஆத்ம வஸ்து ஒன்றே என்பதையும் இது குறிக்கிறது.

மூஞ்சூறு மண்ணைக் குடைவதுபோல அறிவைத் தோண்டி ஆய்பவன் ஞானத்தைப் பெற முடியும் என்பதையும், இறைவனிடம் பேரன்பு பூண்டால் வாழ்க்கைச் சுமை தெரியாது என்பதையும், இந்த மூஞ்சூறு வாகனம் உணர்த்துகிறது.

●



# வினாயகர் சதுர்த்தி விழா



கிழக்கு மாடவீதி, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034, (எப்-3, காவல் நிலையம் எதிரில்)

அன்புடையீர்!

ஸ்வில்தியாீ ரிகபும் விரோதி வருடம், ஆவணி மாதம் 7ம் தேதி ஆங்கிலம் 23-8-09 ஞாயிற்றுக்கிழமை, வளர்பிறை சதுர்த்தி திதி, அஸ்தம நட்சத்திரம் அன்று சித்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 9.00 மணிக்கு சகலாவிஷேகமும், புஷ்ப அலங்காரமும், பகல் 1.30 மணிக்கு அன்னதானமும் நடைபெறுகிறது. பக்தகோடிகள் அனைவரும் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தலைமை

## நுங்கை K. சீனிவாசன்

ஆ.வி.ப.க. அவைத் தலைவர், வடக்கு

முன்னிலை

**புஷ்பா நகர் N.ஆறுமுகம்**
ஆ.வி.ப.க. செயலாளர், வடக்கு

**D.சிவராஜ்**
ஆ.வி.ப.க. செயலாளர், தெற்கு

**A.கணேஷ்பங்காரே**
ஆ.வி.ப.எம்.ஜி. ஆர். செயலாளர், வடக்கு

**கிராமத் தெரு P.ஆறுமுகம்**

**R.துரைராஜ்**
108வது வட்ட செயலாளர்,

**D.சிவக்குமார்**
ஆ.வி.ப.க. செயலாளர், வடக்கு

**P.சின்னையன்**
ஆ.வி. பேரவை செயலாளர், தெற்கு

வரவேற்பு

## திரு. R.கல்யாணராகவன், R.ராதாகிருஷ்ணன்

பரம்பரை அறங்காவலர்கள், APVP தேவஸ்தானம்

## 1000 பேருக்கு அன்னதானம் வழங்குபவர்

## அண்ணன் திரு. V.P.கலைராஜன், M.A.B.L, M.L.A.,

தி.நகர் சட்டமன்ற உறுப்பினர், தென்சென்னை மாவட்ட கழக செயலாளர்

**வ.கோதண்டராமர்**
தெ.செ.மா.க.அ.த

**A.A.அர்ஜுனன்**
தெ.செ.மா.தொ.செ.

**சிற்பி கோ. மோகன்தாஸ்**
மு.மா.து.செ.

நெட்ஓர்க் **C.உமாபதி**

**நா.பாண்டுரங்கன்**

**S.G.கிருஷ்ணன்**
எம்.ஜி.ஆர். பக்தன்

**A.P.சரவணன்**

கேப்டன் **S.ரவி**

நுங்கை **N.மூர்த்தி**

**23.8.09 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணியளவில் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.**

**பக்தகோடிகள் அனைவரையும் அன்புடன் வரவேற்கும்**

ஆலய நிர்வாகி
சுதந்திர போராட்ட தியாக செம்மல்
லேட் **R.ஜெகன்நாதன்**

**விழாகுழு தலைவர்**
**J.பழனி**

என்தெய்வமே! என் கர்த்தாவே !

திருவிதாங்கூர் மலங்கரை யூதாதரியர் டிரடிஷணல்ஸ்(TMJAT)
கருங்கல்

# மாதாமலை தோமா திருத்தலம்

(மாதாமலை செயின்ட் தோமஸ் பஸ்லிக்கா தெய்வாலயம்)
மாதாமலை அரண்மனை, கப்பியறை கிராமம், தென் திருவிதாங்கூர்
பத்மநாபபுரம் அரண்மனை தேசம் (முன்னாள் திருவனந்தபுரம் ஜில்லா-கேரளம்)
கன்னியாகுமரி மாவட்டம், இந்தியா-629156


செயின்ட் தோமஸ்


மாதாமலை திருமேனி

# மாதாமலை திருமேனி

(அபிவந்திய டேவிட் ஆர் தோமஸ் றகூல் திருமேனி. 109ம் HTPT) அவர்களுடைய

## 48ம் ஜென்ம தினம் சந்தேசம் - 18.08.2009

ஏக தெய்வத்திலும்,குமரனாகிய ஏசு பகவானிலும், மறியம் பீபியாகிய மாதாவிலும் ஸ்னேகமும், விசுவாசமும் உள்ள தென் இந்து தேச (தென் இந்திய) யூதாரியர் பாரம்பரிய ஜனங்களே! உலகமெல்லாம் வாழும் என் ரெக்தத்தின் ரெக்தமாகிய யூதாரியர் பாரம்பரிய சமூகத்தவர்களே!109ஆம் ''மாதாமலை திருமேனியுடைய'' ஜென்ம தினம் அனுஷ்டிக்கின்ற வேளையில் உங்கள் யாவருக்கும் ஏக தெய்வத்துடைய அனுக்கிரகங்கள் ஏராளமாக கிடைக்கட்டும். ''சம்பவாமி யுகெ யுகெ''-இறைவன் மனிதனாக ஒவ்வொரு யுகங்கள் தோறும் பூமியில் அவதரிக்கின்றார்.

உலகம் தோன்றி பல லட்சம் வருஷங்கள் ஆன போதிலும், மேலும் பல லட்சம் வருடங்கள் நிலை கொண்டிருக்கப் போகின்ற இந்த உலகில், வெறும் சாதாரணமாக சராசரி 100வருடங்கள் மட்டும் வாழ வாய்ப்பு கிடைத்துள்ள நாம் ஒவ்வொருவரும், ஒருவருக்கொருவர் தன்னைத் தான் சிந்திப்பதுடன் நாம் வாழும் சுற்று சூழ்நிலை மற்றும் உலக சூழ்நிலைகளை சிந்தித்து பார்ப்போமாக.

இறைவன சுதந்திரமாக நம்மை இந்த பூமியில் பிறக்க அனுமதித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பொறுப்புகள் அல்லது எதிர்காலம் அல்லது விதியையும் கொடுத்து இந்த உலகில் செயல்பட்டு வாழச் செய்துள்ளார். வாழ்வின் இறுதியில் மனிதனுடைய ஆத்துமாவை தன்னோடி சேர்த்துவிட்டு, ஜடத்தை உலக மண்ணில் இரண்டற கலக்கச் செய்கின்றார்.

பூமியாகிய உலகில் பிறக்கும் எல்லா மனித உயிர்களுக்கும் வாழ்நாளில் தனக்கு மட்டுமல்லாமல் பிற மனிதர்களுக்காகவும் வாழ இயற்கையான கிரக அமைப்புகளையும் திறமைகளையும் ஓவ்வொரு மனிதனுக்கும் இறைவன் கொடுக்கின்றார். அதன் அடிப்படையில் ''லோஹா சமஸ்தா சுகினோ பவந்து''

உலகமக்கள் யாவரும் சுபீக்ஷமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன், இறைவன் மனிதர்களை ஒருவொருக்கொருவர் அன்பாய் வாழ கூறுகின்றார். பிற உயிர்களை கொல்லாமலும், இயற்கையை அழிக்காமல் பாதுகாத்து பயன்படுத்தி வாழ இறைவன் அறிவுறுத்துகின்றார்.

உலகிலேயே முதல் குலம் தோன்றிய, சூரிய ஒளி மிகவும் கிடைக்கக் கூடிய நமது தென் இந்து தேசத்துக்கு, ஸ்ரீ பரசுராமருடன் வந்து வடக்கே கோகர்ணம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை (ஸ்ரீலங்கா பிரதேசம் மற்றும் கடலில் மூழ்கியுள்ள பகுதிகள் உள்பட) ஆரியர்களை 64 கிராமங்களிலும், திணைக் கிராமங்களிலுமாக, ஏற்கனவே வாழ்ந்திருந்த தாவீது சாலமோன் காலத்தில் வந்து குடியேறிய யூதர்களுடன் ஸ்ரீ பரசுராம் ஆரியர்களை குடியேற வைத்தார்.

இவ்வாறு யூதர்- ஆரியர் இணைந்த ''யூதாரியர்'' சமூகத்தில் தோன்றிய ஸ்ரீபரசுராம், அகஸ்தியர், திருவள்ளுவர், சித்தர்கள், ரிஷிகள், மகரிஷிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் வாழ்ந்திருந்த தென் இந்து தேசத்தின் புனிதத்தை நாம் உணர்வோம். தோமாவுடன் மயிலாப்பூரிலிருந்து அப்போஸ்தலர் தோமாவுடன் தென் திருவிதாங்கூருக்கு வந்த 54 அர்மேனியன் யூதர் குடும்பங்களை நாம் உணர்வோம்.

நமது தென் இந்து தேசத்தில் ஏசுபகவான் 12வயது முதல் 30வயது வரை திருவள்ளுவர் காலத்தில் வந்து வாழ்ந்து பலவற்றை பரிந்து திரும்பி சென்று அவர் பிறந்த தேசத்தில் போதனை செய்தார். தனது சீஷர்களிடம் உலகமெல்லாம் சென்று சிதறிக்கிடக்கும் யூதாரியர் பாரம்பரிய இஸ்ரேல் வம்சத்தவரை ஒன்று சேர்த்து, நல்வழிப்படுத்த கூறி அனுப்பினார்.

நாம் தற்போது வாழும் சூழ்நிலையில், நாம் நம்மைப் பற்றி தன்னைத்தான் உணரவும், நம்மை சூழ்ந்துள்ள சூழ்நிலைகளை உணர்ந்து செயல்படவும் முயற்சி செய்வோம். உணவிலும் மருந்துகளிலும் கலப்படங்கள், பாரம்பரியத்தை அழிக்கும் மருந்துகளின் விநியோகம். ஆண்களின் ஆண்மையை அழிக்கும் உணவு,மருந்து மற்றும் போதைப் பொருட்கள்; பெண்களின் பெண்மை தன்மையை அழித்து முரட்டு தன்மையை ஏற்படுத்தும் உணவு . மருந்து போதை மற்றும் கலாச்சார தொழில் சூழ்நிலைகள்; கடவுள் நம்பிக்கையை குறைக்கும் மதக்கலாச்சாரங்கள்; ஏழைகள் மீண்டும் ஏழைகளாகவும் பிறருக்கு அடிமைகளாகவும் வாழ ஏற்படும்சூழ்நிலைகள்; பிரச்சனைகளை உருவாக்கி, பிரச்சனைகளுக்கு பரிகாரம் ஏற்படுத்தும் முறை; ராஜதந்திர கொலைகள்; அணுஆயுதங்களும் உலைகளும்; இயற்கையை அழித்தல்; உயர் அதிகாரிகளை அனுசரிக்காத ஊழியர்கள்; பாரபட்சமான கல்விமுறைகள்; பாரபட்ச பின் துடர்ச்சை சொத்துரிமை சட்டங்கள் போன்றவற்றால் சமூகம் அழிந்து கொண்டிருக்கின்றது. நீதிக்காக துடிக்கும் இளைஞர்களை சமூக விரோதிகள் திட்டமிட்டி வழித் தவறச் செய்து, அவர்களை குற்றங்கள் செய்ய வைத்து, நூதனமான முறையில் குற்றவாளி என்று கூறி கொலை செய்யும் சூழ்நிலையை நாம் காணமுடிகின்றது.

ஏசு பகவானை ரோமர்கள், யோதர்களை தூண்டிவிட்டு கொலை செய்தது போன்று இந்து தேசத்திலும் சூழ்ந்துள்ள தேசங்களிலும் மேற்குறிப்பிட்டுள்ள சூழ்நிலை காணப்படுகிறது. யூதர் -பாரம்பரியர்கள் வஞ்சிக்கப்படுகின்றார்கள். நீதிக்காக ஏசு தெய்வத்திடம் பிரார்த்திப்போம்! எல்லா உயிர்களையும் பாதுகாப்போம்! தெய்வம் யாவருக்கும் சாந்தியும் சமாதானமும் நல்குவாராக!

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி! ஆமென்! சுபம்

**இவன்,**

**அபிவந்துய டேவிட் ஆர் தோமஸ் றகூல் திருமேனி, 109ம் HTPT**

# நுங்கம்பாக்கம் APVP தேவஸ்தானத்தில்

# சுதந்திர தின விழா சமபந்தி விருந்து

## வார்டு கவுன்சிலர் வா.கணேசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்



**APVP** தேவஸ்தான பரம்பரை அறங்காவலர்கள்
திரு. **R. கல்யாணராகவன்** மற்றும் திரு. **R. ராதாகிருஷ்ணன்**
ஆகியோர் சிறப்பு விருந்தினர் மாமன்ற உறுப்பினர்
திரு **வா. கணேசன்** அவர்களுக்கு பொன்னாடை போர்த்தினர்.



சமபந்தி விருந்தில் பரம்பரை அறங்காவலர்
திரு. **R. ராதாகிருஷ்ணன்,** மாமன்ற உறுப்பினர்
திரு **வா. கணேசன்,** திரு. **M.D. சிதம்பரம், நுங்கை சுரேஷ்,**
மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மாதாமாதம்
நீங்கள் நேரடியாக
ICICI Bank ATM
மூலம் பெற்றுக்
கொள்ளலாம்

1200 சதுரடி
மனையின் விலை
ரூ.96,000/-

Aadicharan Estate (P) Ltd
Regd.

வழங்கும்

சோளிங்கர்
இரயில் நிலையம் மிக அருகில்

வீட்டு மனை
வாங்கினாலே
வருமானம்

முழுத் தொகையும் உடன் செலுத்தி
பத்திரப் பதிவு செய்பவர்களுக்கு
பிரதி மாதம் ரூ.1500/- வீதம்
54 மாதங்களுக்கு (ரூ.81,000/-)
உத்திரவாதத்துடன் திருப்பி தரப்படும்

விட்டு மனையின் சிறப்பு அம்சங்கள் : இரயில் வசதி, பஸ் வசதி, மின்சார வசதி, பள்ளிக்கூடம், கல்லூரி, போலீஸ் ஸ்டேஷன், போஸ்ட் ஆபிஸ், பேங்க் மற்றும் வீடுகள் நிறைந்த பகுதி.

AADHICHARAN ESTATE (P) LIMITED
25/10, Western Apartments, Welcome Colony, Anna Nagar West,
Chennai - 600 101. Email : adhiestate09@gmail.com
044 4264 5969 / 93823 39005
97907 39005 / 93603 84997

RNI Regn. No.TN TAM/2001/03914 R.Dis.No.1288/2008



ஸ்ரீ விகனஸ மஹாகுரவே நம

# ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் 22ஆம் ஆண்டு பிரம்மோற்சவ பத்திரிகை

| வ. எண் | நாள் | மாதம் | கிழமை | காலம் | உற்சவ விவரம் | உபயதாரர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 24.8.09 | ஆவணி 8 | திங்கள் | மாலை | அங்குரார்பணம் சேனை முதலியார் | திரு D.தேசிகன், 4, பிளாட் எண்.1, 3வது தெரு, திருமூர்த்தி நகர், நுங்கம்பாக்கம், சென்னை - 34 |
| | 25.8.09 | ஆவணி 8 | செவ்வாய் | காலை | 4.30 மணிமுதல் 5.30 மணிவரை துவஜாரோஹணம் | திரு. B.வெங்கட்ரத்ன நாயுடு நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| | | | | காலை | 9.00 மணி கேடயம் | திருமணி. ஆர். வள்ளியம்மாள் ராஜாபாதர் முதலியார், 20, வடக்கு மாடவீதி, நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| | | | | இரவு | 7.00 மணி கேடயம் | திரு. M.சக்ரபாணி செட்டியார் திருமதி. அனுசூயா குடும்பத்தினர். 18/10, பிரகதாம்பாள், தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| 2. | 26.8.09 | ஆவணி 10 | புதன் | காலை | 7.30 மணி சூரியபிரபை | திரு. G.கஜபதி, 20/10, ஜெகன்னாதன் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| | | | | இரவு | 7.00 மணி சந்திர பிரபை | திரு. P.G.வெங்கடேசன், 5, திருமூர்த்தி நகர், 3-வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| 3. | 27.8.09 | ஆவணி11 | வியாழன் | காலை | 8.00 மணிக்கு ஹம்ஸவாஹனம் | திரு.N.C.பிரியா, 121, வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| | | | | இரவு | 7.00 மணிக்கு ஹனுமந்தவாஹனம் | திருப்பணி செம்மல் M.V.ஜெயசங்கர்,B.E. 12, கிருஷ்ண ஐயர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| 4. | 28.8.09 | ஆவணி12 | வெள்ளி | காலை | 8.00 மணிக்கு கேடயம் | திரு. V.ராமசந்திரன், திருமதி R.உமா, 17, மாங்காடு சாமி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| | | | | இரவு | 7.00 மணிக்கு சேஷ வாஹனம் | திருமதி. V.K.ஸ்ரீனிவாசன் குடும்பத்தினர் திரு. ராம் வாங்கல், Dr. கிஷோர் வாங்கல் |
| 5. | 29.8.09 | ஆவணி13 | சனி | காலை | 8.00 மணிக்கு பல்லக்கு நாச்சியார் திருக்கோலம் | சிங்கார், 15, சீசான்ஸ் காம்பளக்ஸ், 150, மாண்டித்தெரு ரோடு, எழும்பூர், சென்னை-8 |
| | | | | மாலை | 7.00 மணிக்கு கருட சேவை | திரு. R.V.R.மூர்த்தி, குமரப்ப முதலி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34 |
| 6. | 30.8.09 | ஆவணி14 | ஞாயிறு | காலை | 8.00 மணிக்கு கேடயம் சூர்ணாபிஷேகம் | திருமதி. வசுந்தரா திருலோகசந்தர், 115,6வது தெரு, F - பிளாக், அண்ணாநகர் கிழக்கு, சிந்தாமணி அருகில், சென்னை |
| | | | | இரவு | 7.00 மணிக்கு யானை வாஹனம் | திரு. T.K.பாலகிருஷ்ணன், திருமதி.உஷா பால கிருஷ்ணன், கிருஷ்ணமாச்சாரி ரோடு, நுங்கம்பாக்கம்,சென்னை-34 |
| 7. | 31.8.09 | ஆவணி15 | திங்கள் | காலை | 4.30 மணிமுதல் 5 மணிக்குள் திருத்தேர் | திரு. Dr. J. விஸ்வநாத், M.D.D.CH. ஜம்புலிங்கம் தெரு, நுங்கம்பாக்கம், சென்-34 |
| | | | | இரவு | 7.00 மணிக்கு கேடயம் | திரு. T.C.கோபிநாத், கௌரி மெட்ரிகுலேஷன் பள்ளி,T.C.கௌரி டுடோரியல் காலேஜ் சாதனா மெட்ரிகுலேஷன் பள்ளி 23, நூர் வீராசாமி லேன், நுங்கம்பாக்கம்,செ-34 |
| 8. | 01.9.09 | ஆவணி16 | செவ்வாய் | காலை | 8 மணிக்கு பல்லக்கு வெண்ணைத்தாழிகண்ணன் | திரு.பாலாஜி மற்றும் அனுராதா 32, மாங்காடு தெரு, நுங்கம்பாக்கம்,சென்-34 |
| | | | | இரவு | 7.00 மணிக்கு குதிரைவாஹனம் | திரு. L.நடராஜன்,M.A.B.L.,F.C.A.,A.C.S., 21,ஜம்புலிங்கம் தெரு, நுங்கம்பாக்கம், சென்-34 |
| 9. | 02.9.09 | ஆவணி17 | புதன் | காலை | 8 மணிக்கு பல்லக்கு அதன் பிறகு தீர்த்தவாரி | திரு. P.L. நாராயணன், Bar-at-Law 14, ராமன்தெரு, தி.நகர், சென்னை-17 |
| | | | | இரவு | 7.00 மணிக்கு புஷ்ப பல்லக்கு | Star TV பாலா (எ) C.பாலமுருகன் 24,2-வது தெரு, ஜெயலட்சுமிபுரம், நுங், செ-34 |
| 10. | 03.9.09 | ஆவணி18 | வியாழன் | பகல் | 3.00 மணிக்கு துவாதஸ ஆராதனம் 7 மணிக்கு கேடயம் | Bagdi திரு. R. நாராயணதாஸ் 18ஏ, அவென்யூ ரோடு, நுங்கம்பாக்கம்,சென்-34 |
| 11. | 04.9.09 | ஆவணி19 | வெள்ளி | இரவு | 7.00 மணிக்கு விடையாற்றி | திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் நிமந்தகாரர்கள், அருள்மிகு அகத்தீஸ்வரர் ஸ்ரீபிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், நுங்கம்பாக்கம், சென்னை-34 |

Owned, Published and Printed by **S. RANGANATHAN,** published from 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034
and printed at **J.S.R. GRAPHICS & PRINTERS**, 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034. **Editor: S. RANGANATHAN.**